ஐ.நா. யுத்த குற்ற ஆதாரங்களை சேகரிக்கும் அலுவலகத்திற்கு இலங்கை கடும் எதிர்ப்பு

-ஐ.நா.மனித உரிமை பேரவையின் உயர் பீடத்தில் பீரிஸ் தெரிவிப்பு-

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் ஏற்படுத்தியுள்ள யுத்தகுற்ற ஆதாரங்களை சேகரிப்பதற்கான பொறிமுறையை மீண்டுமொரு முறை நிராகரித்துள்ள இலங்கை, அது பயனளிக்காது சமூகங்களை துருவமயப்படுத்தும் என குறிப்பிட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் உயர்மட்டபீடத்தில் உரையாற்றுகையிலேயே இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இதனை தெரிவித்துள்ளார்.

தன்னார்வ நிதியை பயன்படுத்துவதை இலங்கை குறிப்பாக எதிர்ப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் இது புறநிலை தன்மையை குறைமதிப்பிட்டு உட்டுபடுத்துகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

46 தீர்மானத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆதாரங்களை சேகரிப்பதற்கான பொறிமுறை இலங்கை மக்களிற்கு உதவாது,இலங்கைசமூகத்தை துருவமயப்படுத்தும்,சவால் மிகுந்த இந்த தருணத்தில் பொருளாதார அபிவிருத்தி சமாதானம்,ஐக்கியம் ஆகியவற்றிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என இலங்கை மீண்டுமொரு தனது நிலைப்பாட்டை வலியுறுத்துகின்றது என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேலும் உரையாற்றுகையில்,

மனித உரிமைகளை ஊக்குவித்து, பாதுகாப்பதனை உணர்ந்து கொள்வதற்கான பலதரப்புக் கட்டமைப்பில் இலங்கை ஒரு செயலூக்கமான பங்கேற்பாளராக உள்ளது. எமது அரசியலமைப்பில் பொதிந்துள்ள அடிப்படை உரிமைகள், ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட எமது அரசாங்கத்தின் அமைப்புக்களின் மூலம் படிப்படியாக முன்னேறி, எமது சுதந்திரமான நீதித்துறையின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. பயங்கரவாதத்திலிருந்து பல சவால்களை எதிர்கொண்ட போதிலும், நாடு முழுவதும் சமாதானம், பாதுகாப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுத்துள்ளோம்.

எமது ஜனநாயக மரபுகள் மற்றும் சுயாதீன நிறுவனங்கள் உலகளாவிய வயது வந்தோருக்கான வாக்குரிமையின் மூலம் சீரான இடைவெளியில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை உறுதி செய்கின்றன. மோதலுக்குப் பிந்தைய மீட்பு மற்றும் குணமடைதலில் நாம் பெற்ற கணிசமான முன்னேற்றத்தை மேலும் முன்னேற்றுவோம். இதற்காக நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் சமூக நீதிக்கான உள்நாட்டு நிறுவனங்களை அமைத்துள்ளோம்.

இந்த சபையின் மூலம், பரஸ்பரம் நன்மை பயக்கும் 3 உலகளாவிய காலாந்தர மீளாய்வுகளை நாங்கள் நிறைவு செய்து, ஒப்பந்த அமைப்புக்களுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, விசேட நடைமுறைகளுக்கான ஆணைகளை வைத்திருப்பவர்களை வரவேற்று, உள்நாட்டு மற்றும் சர்வதேச உரையாசிரியர்களுடன் வெளிப்படையான மற்றும் திறந்த கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளோம். மனித உரிமைகள் தொடர்பில் ஐ.நா. விடம் உள்ள கணிசமான நிபுணத்துவம் மற்றும் அதன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் நாங்கள் பயனடைந்துள்ளோம். நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான எமது உள்நாட்டு செயன்முறைகளுக்கு நாட்டிற்கான ஐ.நா. குழுவின் மூலமாக தொடர்ந்தும் நல்கப்படுகின்ற ஆதரவை நாங்கள் மதிக்கின்றோம்.

இந்தக் கூட்டுறவு ஊடாடலினூடாக, எமது உள்நாட்டுக் கட்டமைப்பு மற்றும் சர்வதேசக் கடப்பாடுகளுக்கு அமைய, இன மற்றும் மத அடையாளம் மற்றும் அரசியல் சார்பு எதுவுமின்றி, எமது பிரஜைகள் அனைவரினதும் மனித உரிமைகள் மற்றும் சமூக நீதியை மேம்படுத்தி, பாதுகாப்பதை நாங்கள் தொடர்ந்தும் உறுதிசெய்கின்றோம்.

கோவிட்-19 தொற்றுநோயால் தோற்றுவிக்கப்பட்ட பொருளாதாரப் பின்னடைவுகள் நிலவுகின்ற போதிலும், அபிவிருத்திக்கான எமது மக்களின் உரிமையை நாங்கள் தொடர்ந்தும் உறுதி செய்து வருகின்றோம். சமீபத்திய நிலையான அபிவிருத்தி இலக்கு அறிக்கைக்கு அமைய, இலங்கை தனது உலகளாவிய தரவரிசையை 7 நிலைகளால் மேம்படுத்தியுள்ளது. தமது விரிவான அடிமட்டத்திலான தொடர்பு மற்றும் நிபுணத்துவத்தின் மூலம் எமது சிவில் சமூகப் பங்காளிகள் அளித்த பங்களிப்பை நாங்கள் பாராட்டுகின்றோம்.

சர்வதேச சமூகத்தின் அபிவிருத்தியடைந்து வரும் உறுப்பு நாடாக, நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான எமது முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற தொற்றுநோய் மற்றும் ஐரோப்பாவில் நிலவுகின்ற மோதல் போன்ற நெருக்கடி மிகுந்த சூழ்நிலைகளினால் மேலும் ஏற்படவிருக்கின்ற பாதகமான பொருளாதார விளைவுகளை எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

சபையின் பணிகளை மீளாய்வு செய்யும் காலகட்டத்தில் நாம் இன்று இருக்கின்றோம். அதன் முன்னோடி ஆணைக்குழுவின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த நம்பகத்தன்மை இடைவெளியை சமாளிப்பதில் சபை வெற்றி பெற்றுள்ளதா என்பதை நாங்கள் பிரதிபலிக்கின்றோம். மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பல்தரப்புக் கட்டமைப்பு கடந்த தசாப்தங்களில் படிப்படியாக உருவாக்கப்பட்டது. மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை உறுப்பு நாடுகளின் இறையாண்மை சமத்துவத்தின் அடிப்படையில் பாரபட்சமற்ற தன்மை, புறநிலை மற்றும் தேர்ந்தெடுக்கப்படாத கொள்கைகளால் வழிநடத்தப்பட வேண்டும் என்ற புனிதமானதாக நாம் கருதும் முக்கிய கொள்கைகளில் ஒருமித்த கருத்து உருவாக்கப்பட்டது. சபையின் பணி முறைமைகள் வெளிப்படையானதாகவும், நியாயமானதாகவும், பாரபட்சமற்றதாகவும் இருக்க வேண்டும் என்றும், உண்மையான உரையாடலை செயற்படுத்த வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை தீர்மானம் 60/251 மற்றும் மனித உரிமைகள் சபையின் 5/1 மற்றும் 5/2 ஆகிய தீர்மானங்களின் மூலம் தீர்மானிக்கப்பட்டன.

சம்பந்தப்பட்ட நாடான இலங்கையின் அனுமதியின்றி சமர்ப்பிக்கப்பட்ட 46/1 தீர்மானத்தின் மீது மார்ச் 2021 இல் சபை வாக்களித்திருந்தது. இந்த விடயத்தைப் பரிசீலிப்பதானது இந்த மன்றத்தை துருவப்படுத்தி அரசியல் மயமாக்கியது. ஐ.நா. பொதுச் சபை முதலில் இந்த சபைக்கு வழங்கிய ஆணையில் இருந்து விலகி, பல நாடுகளால் கடுமையாக எதிர்க்கப்பட்ட ஒரு நடவடிக்கையான ஆதாரம் சேகரிக்கும் பொறிமுறையை இந்தத் தீர்மானத்தின் செயற்பாட்டுப் பந்தி 6 குறித்து நிற்கின்றது. இத்தகைய முன்முயற்சிகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரங்கில் ஒற்றுமையின்மையை உருவாக்குகின்றன. இது நல்லிணக்க முயற்சிகளுக்கு தடைகளை உருவாக்கி, கடந்தகால காயங்களை மீண்டும் திறப்பதன் மூலம் வெறுப்பை வளர்த்து, சமூகங்களை துருவப்படுத்துகின்றது.

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் அரசாங்கங்களுக்கு உதவுவதற்கான விரிவான பயனுள்ள பணி முறைகளை உண்மையில் உறுப்பு நாடுகள் இந்த சபைக்கும், அதன் செயலகத்திற்கும் கட்டாயமாக்கியுள்ளன. எமது மக்கள் பாதுகாப்பான, நீண்ட மற்றும் கண்ணியமான வாழ்க்கையை வாழ்வதை உறுதிசெய்வதற்கு உதவிய, சபையின் உற்பத்திகரமான மற்றும் நன்மை பயக்கும் பணியின் அம்சங்களில் இலங்கை தீவிரமாகவும் ஆக்க பூர்வமாகவும் பங்கேற்றுள்ளது. தண்டனைக்குரிய, அரசியல்மயமாக்கப்பட்ட, பிளவுபடுத்தும், உதவாத மற்றும் புறம்பான காரணங்களால் தொடங்கப்பட்ட விடயங்களை நாங்கள் நிராகரிக்கின்றோம்.

உலகில் ஏனைய இடங்களைப் போலவே, பயங்கரவாதத்தைக் கையாளும் போது மனித உரிமைகள் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இடையே ஒரு நியாயமான சமநிலையை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டமானது விசாரணைக்காக தடுத்து வைக்கப்படுதல் மற்றும் விசாரணை ஆகியவற்றுக்கு உட்பட்ட நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்றும், கருத்துச் சுதந்திரம் போன்ற ஜனநாயக சுதந்திரங்களைக் கட்டுப்படுத்தக் கூடாது என்றும் இலங்கை உறுதியாக நம்புகின்றது. இந்த நோக்கங்களைக் கருத்திற்கொண்டு, பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு 43 வருடங்களின் பின்னர், அதனைத் திருத்துவதற்கான ஆரம்ப கட்டமாக, இலங்கைப் பாராளுமன்றத்தில் நான் அண்மையில் ஒரு சட்டமூலத்தை முன்வைத்தேன்.

புறநிலை மற்றும் பற்றின்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அவசியமான விளைவுகளைக் கொண்ட தன்னார்வ நிதியைப் பயன்படுத்துவது தொடர்பில் நாங்கள் ஆட்சேபனையை முன்வைக்கின்றோம். இந்தப் பின்னணியில், 46/1 தீர்மானத்தின் ஓ.பி. 6 இன் கீழ் நிறுவப்பட்ட சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையானது இலங்கை மக்களுக்கு உதவாது, இலங்கை சமூகத்தை துருவமயமாக்கி, சவாலான நேரத்தில் பொருளாதார அபிவிருத்தி, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை மோசமாகப் பாதிக்கும் என இலங்கை மீண்டும் தனது கருத்தை வலியுறுத்துகின்றது. உயர்ஸ்தானிகர் அலுவலகம் உட்பட பலதரப்பு அமைப்பு முழுவதும் கடுமையான நிதிப் பற்றாக்குறை நிலவுகின்ற தற்போதைய காலகட்டத்தில், உறுப்பு நாடுகளின் வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இது ஒரு பயனற்ற விடயம் ஆகும்.

இலங்கை தொடர்பான ஊடாடும் உரையாடலுக்காக மார்ச் 4ஆம் திகதி இந்த சபை ஒன்றுகூடவுள்ளது. இலங்கை குறித்த எழுத்துபூர்வமான புதிய தகவல்கள் குறித்த சில எண்ணக்கருத்துக்களை அதன்போது உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன் என்றார்.

இலங்கையர்கள்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வர்த்தக நிலுவையை ஈடுசெய்ய, சுற்றுலாத்துறை தொடங்கும் வரை அது அனுமதிக்கும் என நம்புகின்றனர். உண்மையில், அமெரிக்காவில் உள்ள பெடரல் ரிசர்வ் வட்டி விகிதங்களை உயர்த்த உள்ளதால், குறிப்பாக உலகளாவிய நிலைமைகள் மாறிவிட்டதால், கடன் வாங்குவதற்கான செலவு இலங்கைக்கு எட்டாததாக இருக்கும். மேலும், மூலதனச் சந்தைகளில் கடன் வாங்குவதும் கடனை மாற்றிக்கொள்வதும் இலங்கை சிக்கியிருக்கும் கடன் நெருக்கடியை நீடிக்கவே செய்யும்.

ஹிமால் சவுத் ஏசியன்: 'நவதாராளவாதம்' என்ற வார்த்தையின் பயன்பாடு தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளை துல்லியமாக விவரிக்கிறதா என்பது குறித்து சமீபத்தில் சில விவாதங்கள் நடந்துள்ளன. அதன் விலைக் கட்டுப்பாடுகள் மற்றும் வர்த்தக பாதுகாப்புவாதத்தை சில முனைகளில் விதித்துள்ளது. அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளை நீங்கள் எவ்வாறு விவரிப்பீர்கள்? பரிந்துரைக்கப்பட்டதைப் போல இது திட்டவட்டமானது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

அகிலன் கதிர்காமர் : கடந்த சில தசாப்தங்களாக இலங்கையில் அரசியல் பொருளாதார துறைசார் புலமை மற்றும் மார்க்சிய பகுப்பாய்வுக்கு பற்றாக்குறை காணப்படுகிறது. இதனால் சிலர் நவதாராளவாதத்தின் கோட்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். உண்மையில், எங்களில் சிலர் 2012 இல் இலங்கையின் அபிவிருத்திகளை புரிந்துகொள்வதற்கும் நவதாராளவாத திட்டத்தின் விமர்சனங்களை முன்வைத்து, இளைய கல்வியாளர்கள் மற்றும் ஆர்வலர்களுடன் மூன்று மாத கால வாராந்த கருத்தரங்கை ஏற்பாடு செய்தோம். அது இலங்கையில் புதிய தாராளமயம் பற்றிய விவாதத்தை உருவாக்க உதவியது. உலகச் சூழலில் உள்ளூர் முன்னேற்றங்களைப் பார்த்தால் மட்டுமே எமது பொருளாதாரச் சூழலை பகுப்பாய்வு செய்வதற்கு நவதாராளவாதத்தின் கட்டமைப்பைப் பயன்படுத்துவதன் மதிப்பை ஒருவர் ஏற்றுக்கொள்ள முடியும். திறந்த சந்தைகள் மற்றும் தனிப்பட்ட முகவர்களை மறுசீரமைக்கும் ஒரு சித்தாந்தத்துடன் கூடிய நிதி மூலதனத்தின் ஒரு பாரிய வர்க்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக இது எப்படி இருக்கிறது என்பது தெளிவாகிறது.

எமது கல்வியாளர்களும் புத்திஜீவிகளும் நவதாராளமயம் பற்றிய பரந்த இலக்கியங்களுடன் இன்னும் கடுமையாக ஈடுபடவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. ஆனால் அவர்களின் வர்க்க குணாதிசயத்தின் விளைவாகவும், நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்பட்ட ஆராய்ச்சி திட்டங்களாகட்டும் அல்லது மேற்கத்திய நலன்களுக்கு அவர்கள் எவ்வாறு ஈர்க்கப்படுகிறார்கள் என்பதையும் நான் காண்கிறேன். புதிய செம்மையான பொருளாதார பகுப்பாய்வு மேலைத்தேய கல்விக்கூடத்தில் நீடித்தது. பூகோளத்தின் தெற்கில் உள்ள பல நாடுகளில் இது ஒரு அளவிற்கு உண்மையாக இருந்தாலும், இந்த யோசனைகளுக்கு சில எதிர்ப்புகள் உள்ளன. குறிப்பாக நெருக்கடி காலங்களில், இது மாற்று வழிகள் பற்றிய விவாதத்திற்கு வழிவகுக்கிறது. உதாரணமாக, இந்தியாவில், பொருளாதாரத்தில் பழமைவாத மற்றும் முக்கிய நிலைகளுக்கு மாற்றாக புதுடில்லியில் உள்ள பொருளாதார ஆராய்ச்சி அறக்கட்டளையால் நடத்தப்படும் மக்ரோஸ்கானில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சியை பின்பற்றுகிறேன். இலங்கையில் அது பெரும்பாலும் இல்லை.

1970களின் பிற்பகுதியில் இருந்து, இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் நவதாராளவாத கொள்கைப் பொதிகளைப் பின்பற்றி வந்தன என்றும், 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்தப் போக்கு துரிதப்படுத்தப்பட்டது என்றும் நான் கூறுவேன். மேலும், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் அல்லது புதிய நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள், இந்தக் கொள்கைப் பொதிகளை அணுகலாம். உந்துதல் நவதாராளவாதக் கண்ணோட்டத்தின் வடிவமாகவே உள்ளது. உதாரணமாக, ராஜபக்ஷ ஆட்சியானது, நலன்புரிவாதம் மற்றும் கிராமப்புற மேம்பாடு என்ற சொல்லாடல்களில் அதன் சந்தைக்கு உகந்ததான கொள்கைகளை மறைக்கிறது. எவ்வாறாயினும், நிதித்துறையில் அவர்களின் சலுகைகள் மற்றும் முக்கிய பொதுத்துறைகளில் குறைந்த முதலீடு ஆகியவற்றைப் பார்க்கும்போது, அவர்களின் நவதாராளவாதப் பக்கச்சார்பை தவறவிடுவது கடினம்.

ஹிமால் சவுத் ஏசியன் : கடந்த பல மாதங்களாக, சர்வதேச பத்திரிகைகளில் இலங்கையின் பொருளாதாரம் பற்றிய செய்திகள் ஓரளவுக்கு வந்துள்ளன. இந்தக் கதைகள் எவ்வளவு நம்பகமானவை என்று நீங்கள் கண்டறிந்துள்ளீர்கள்? குறிப்பாக இந்துசமுத்திர பிராந்தியத்தில் வளர்ந்துவரும் புவிசார் அரசியல் பதற்றங்களின் அடிப்படையில், அத்தகைய உள்ளடக்கம் பற்றி வேறு சுவாரஸ்யமான அவதானிப்புகள் உள்ளனவா?

அகிலன் கதிர்காமர் : இலங்கையின் அடிப்படை யதார்த்தங்களுக்கு மாறாக, இந்தியா மற்றும் சீனாவை மையமாகக் கொண்ட புவிசார் அரசியலுக்கு சர்வதேச உள்ளடக்க விடயங்களில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பதே எனது கண்ணோட்டம். மேலும் இலங்கையின் புத்திஜீவிகள் அத்தகைய புவிசார் அரசியல் கட்டமைப்பிற்கு அதை குறைக்கும்போது, இது சர்வதேச பத்திரிகைகள் மற்றும் சிந்தனைக் குழுக்களின் மேலோட்டமான பகுப்பாய்வு ஆகும். நாம் கவலைப்பட வேண்டிய விடயம் சீனக் கடன் பொறி அல்லவென்றும் மூலதனச் சந்தைகளுக்கு செலுத்த வேண்டிய இறையாண்மைக் கடனே என்றும் சில ஆண்டுகளுக்கு முன்பு நான் முன்னிலைப்படுத்தியிருந்தேன். இந்த ஒவ்வொரு மூலங்களுக்கும் முறையே 10 சதவீதம் மற்றும் 40 சதவீதம் கடனாக இருந்தது. உலகளாவிய நிதி மூலதனத்துடன் அதிக ஒருங்கிணைப்புடன் இலங்கையின் பொருளாதாரத்தின் புதிய தாராளமயமாக்கல் இலங்கையை ஆழமான நெருக்கடிக்குள் தள்ளும் என்று நான் வாதிட்டேன். அந்த நேரத்தில் சிலர் கவனம் செலுத்தினர். ஆனால் இப்போது இந்த நெருக்கடிக்கு மத்தியில், திடீரென்று அனைவரும் இறையாண்மை பத்திரங்களைப் பற்றி பேசுகிறார்கள்.

காலனித்துவத்தின் ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பின்னோக்கிச் செல்லும் போது, இலங்கையின் பொருளாதாரம் புவிசார் அரசியல் சூழ்ச்சிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் சர்வதேச வர்த்தகத்தால் மிதிக்கப்படும் ஒரு சார்பு பொருளாதாரமாக உள்ளது. எனவே, சர்வதேச அரசியல் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் தீவில் எப்போதுமே மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பரந்த பூகோளப் போக்குகளுக்கு மத்தியில் எமது நிலைமையை நாம் பார்ப்பது முக்கியமானதென்றாலும் இலங்கைப் பொருளாதாரத்தின் பகுப்பாய்வை வரலாற்றின் ஒவ்வொரு புள்ளியிலும் ஒரு உலகளாவிய கதையாக மட்டும் சுருக்காமல் எவ்வாறு சூழலுக்கு ஏற்ப மாற்றுகிறோம் என்பதே பிரச்சினையாகும். சில இடதுசாரிகள் சீனா மற்றும் அமெரிக்கா மீது ஒரு நிலைப்பாட்டை எடுப்பது இலங்கையின் வர்க்கப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமம் என்று நினைக்கும் இடதுசாரிப் பிரிவினருக்கும் இதனை ஒரு பிரச்சினையாகவே நான் பார்த்தேன்.

ஹிமால் சவுத் ஏசியன் : சமீபத்தில், ஃபிட்ச் மற்றும் ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் ஆகிய தரமதிப்பீட்டு முகவர்கள் இலங்கையின் நீண்டகால இறையாண்மை தர மதிப்பீடுகளை குறைத்துள்ளனர். இது போதுமான அந்நிய செலாவணியை பேணுவதற்கான இலங்கையின் இயலாமையை பிரதிபலிக்கிறது. அத்தகைய மதிப்பீடுகள் எவ்வளவு துல்லியமானவை மற்றும் அவற்றை நாம் எவ்வளவு தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும்? பொதுவாக, தரப்படுத்தல் முகவரமைப்புகளின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களில் அவற்றின் தாக்கம் குறித்து உங்கள் கருத்து என்ன?

அகிலன் கதிர்காமர் : தர மதிப்பீட்டு முகவரமைப்புகள் சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் உலகளாவிய நிதியளிப்பாளர்கள், குறிப்பாக கடந்த நான்கு தசாப்தங்களில் உலகளாவிய நிதி மூலதனம் மேலாதிக்கமாக இருக்கும் போது ஒருவருக்கொருவர் வலுப்படுத்துகிறார்கள். எனவே, தர மதிப்பீட்டு முகவரமைப்புகள் நடுநிலை வகிக்காது மற்றும் உலகளாவிய மூலதனத்தின் ஓட்டத்தை வழிநடத்தும் வகையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவர்களின் கூற்றுகள் சுய–நிருப்திக்கான தீர்க்கதரிசனங்களுக்கு வழிவகுக்கும். எனவே, இலங்கை போதுமான அந்நியச் செலாவணியை அணுக முடியாது எனக் கூறி மதிப்பீடுகள் குறைந்துவிட்டால், பிணைமுறி சந்தைகளுக்கு இலங்கைப் பிணைமுறிகளுக்கு அதிக மேலதிக கட்டணம் தேவைப்படும். இதனால் வெளிநாட்டுக் கடன்களை அணுகுவது கடினமாகிவிடும்.

ஹிமால் சவுத் ஏசியன் : இறுதியாக, தற்போதைய பொருளாதார நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு இலங்கைக்குள்ள சிறந்த தெரிவுகள் யாவை? சிக்கனத்தை நோக்கிச் செல்லும் கொள்கைகளின் விளைவாக வறுமையை எதிர்கொள்ளும் மக்களைப் பாதுகாக்கும் அதேவேளையில் நாட்டின் நிதி நிலையை மேம்படுத்த அரசாங்கத்திற்கு வழிகள் உள்ளதா?

அகிலன் கதிர்காமர்: இலங்கையின் வர்த்தக இருப்பை பொறுத்தவரை ஏற்றுமதியை விட 80 சதவீதம் அதிகமாக இறக்குமதி உள்ளது. வெளி சந்தையை அதன் சொந்த சாதனங்களுக்கு விட்டுவிட்டால், அபிவிருத்திக் கொள்கைகளை பொருட்படுத்தாமல் ஏற்றுமதிகள் இறக்குமதியைப் பிடித்துக்கொள்ள நீண்டகாலமாகும். உற்பத்தி, உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதிக்கு தேவையான எரிபொருள் உட்பட இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதைத் தவிர உணவு, மருந்துகள் மற்றும் இடைநிலைப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு முன்னுரிமை அளிப்பதைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு வழியில்லை. அத்தகைய இறக்குமதிகளுக்கு முன்னுரிமை அளிக்க அரசு ஒரு பொது விநியோக முறையை நிறுவ வேண்டும். அங்கு அரசாங்கம் இறக்குமதிக்கு பொறுப்பேற்க வேண்டும். இல்லையெனில், இறக்குமதி செய்யும் தனியார் வர்த்தகர்கள் முன்னுரிமை அளிக்க மாட்டார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக இருந்தது போல் அதிக வரம்பு இருந்தால் அவர்கள் தொடர்ந்து ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்வார்கள்.

2019 தேர்தலுக்குப் பிறகு வரிகளைக் குறைக்கும் ஜனாதிபதி ராஜபக்ஷவின் நகர்வானது அரசாங்கத்தின் வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9 சதவீதம் குறைவடைந்தது என்ற வரலாற்று ரீதியான வீழ்ச்சியென்ற அர்த்தமாகும். இதன் விளைவாக, இந்த அழிவுகரமான நெருக்கடியின் போது மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கத்தால் முடியவில்லை. மறைமுக வரிகளால் பொதுமக்களுக்குச் சுமையை ஏற்படுத்துவது கடினம் என்பதாலும் பொருளாதாரம் சுருங்கி , வருமானம் குறைந்து, வாழ்க்கைச் செலவு அதிகரித்துவரும் இக்காலகட்டத்திலும் கூட நேரடி வருமான வரியான சொத்து வரியை அரசு அமுல்படுத்த வேண்டும். மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும் பொருளாதாரத்தை நெருக்கடியிலிருந்து வெளியேற்றுவதற்காகவும் உள்ளூர் உற்பத்தியைத் தூண்டுவதற்கான தேவையை உருவாக்குவது உட்பட அரசின் முதலீட்டிற்காகவும் செல்வத்தை மறுபங்கீடு செய்தல் வேண்டும் .

இவை வலிமையான காலங்கள். மேலும், உலக வரலாற்றிலிருந்து நாம் விடயங்களை எடுத்துக்கொண்டால் , 1920கள் மற்றும் 1930களின் நெருக்கடிகளைப் போன்றதொரு நெருக்கடியான சூழ்நிலையாகும். அப்போது உலகின் முன் இருந்த விருப்பங்களில் கம்யூனிசப் புரட்சியும் பாசிசமும் இருந்தன. அந்த நெருக்கடியின் மத்தியில், ஜோன் மேனார்ட் கெய்ன்ஸ் ஒரு கொள்கை ரீதியான ஆட்சியுடன் மிகவும் வேறுபட்ட பொருளாதார அணுகுமுறையை வழங்கினார். அது சமூக நல அரசுகளில் உச்சக்கட்டத்தை அடைந்தது. இது உண்மையில் முதலாளித்துவத்தை காப்பாற்றியது. காலங்கள் ஒரே மாதிரியானவை. மேலும் கேள்வி என்னவென்றால், இலங்கையர்கள் பொருளாதாரம் பற்றிய பழைய தந்திரங்களைத் திரும்பப் பெறுவதற்குப் பதிலாக குறிப்பிட்ட வட்டத்திற்கு வெளியே சிந்திக்கத் தயாராக இருக்கிறார்களா? நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், 1930 களின் நெருக்கடிக்குப் பிறகு உணவு மானியங்கள், இலவசக் கல்வி மற்றும் உலகளாவிய சுகாதார முறைமைகள் அல்லது 1970 களின் நெருக்கடிக்குப் பின்னரான அரசு மற்றும் சமூகத்தில் , நவதாராளவாத மறுசீரமைப்பு போன்ற முற்றிலும் வேறுபட்ட நிறுவனங்கள் தோன்றுவது உட்பட மிகப் பாரிய மாற்றங்கள் இருக்கும்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி களத்தில் பல்வேறு தரப்பினருடன் விடயங்கள் வெளிப்படுத்தப்படுவதை நாங்கள் ஏற்கனவே காண்கிறோம். அதிகரித்துவரும் தொழிற்சங்கங்களின் போராட்டங்களும் விவசாயிகள் போராட்டங்களும் இதனை கூறுகின்றன. உழைக்கும் மக்கள் எவ்வாறு சவால்களை முன்வைக்கின்றனர் மற்றும் உயரடுக்கு, ஆளும் வர்க்கங்கள் நெருக்கடியை எவ்வாறு கையாள முயல்கின்றன என்பதைப் பொறுத்தே எதிர்காலத்திற்கான பாதை அமையப் போகிறது. இலங்கையில் கடந்த நான்கு தசாப்தங்களாக, உயரடுக்கின் அநியாயமான குவிப்பு மற்றும் வெளிப்படையான நுகர்வு உள்ளிட்ட அத்துமீறல்கள், ஆடைத் தொழிற்சாலைகளிலும் தேயிலைத் தோட்டங்களிலும் புலம்பெயர்ந்த, வீட்டு மற்றும் முறைசாரா தொழிலாளர்களாக உழைக்கும் மக்களின் உழைப்பு மற்றும் துன்பத்தில் வந்துள்ளன. ஆனால் அந்தப் பாதை அதன் தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளது. மேலும் இது தொற்றுநோய்களின் இடையூறுகளின் கீழ் மறைந்திருக்கும் ஒரு வர்க்கப் போராட்டம் மற்றும் எமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பொருளாதார நெருக்கடியுடன் கொதித்துக்கொண்டிருக்கிறது .